2015 பிப்ரவரி 19]

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் கும்பல் என்று சொல்லியிருக்கிறார். அது கும்பல் இல்லை. பொது மக்கள் என்று நீங்கள் உணரவேண்டும். ஒரு கிராமத்திலே 300 ஆண்களும், 200 பெண்களும் திரண்டு வருகிறார்கள் என்றால், அது ஏதோ திட்டமிட்டு வருகின்ற கூட்டமல்ல; பொது மக்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், என்னுடைய அனுமதியில்லாமல் பத்திரிகையைக் காட்டக்கூடாது. இதையெல்லாம் என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் காட்டக்கூடாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் இல்லை, (குறுக்கீடு) என்னுடைய அனுமதியை வாங்கிக் கொண்டுதான், இங்கு கொண்டு வந்த பத்திரிகை செய்தியைக் காட்டவேண்டும். (குறுக்கீடு) இப்படியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை செய்தி குறித்து உங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவரே சொல்கிறார். நாங்கள் அந்த விதிமுறையை ஏற்றுக்கொள்கிறோம். ஒத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும் உட்காருங்கள். நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

4. அரசினர் தீர்மானம்—*தொடர்ச்சி*

தே.மு.தி.க. உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு தே.மு.தி.க. உறுப்பினர்கள் நடந்துகொண்டதையெல்லாம் நீங்கள் பார்த்தீர்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். எந்த அளவுக்கு அவர்களுடைய அக்கிரமம் இங்கு இருந்தது என்பது மட்டுமல்ல; அவர்களுடைய அராஜகம் வெளியிலும் எந்தளவுக்கு நீடித்திருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். தே.மு.தி.க.–வைச் சேர்ந்த திரு. சி.எச். சேகர், திரு. க. தினகரன் மற்றும் அவருடைய கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இன்று சபைக் காவலர்களை வெளியிலே தாக்கி, அவர்கள் காயமடைகிற அளவுக்கு கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்குத் தெரிவித்து, சபைக்கு வெளியே நடந்திருக்கும் நடவடிக்கைகளுக்கும், சபைக்கு உள்ளே நடந்திருக்கும் நடவடிக்கைகளுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுடைய அராஜகம், அக்கிரமம் சட்டமன்றத்திற்குள்ளே மட்டுமல்ல; வெளியிலும் தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். அதற்காக அனைத்துக் கட்சிகளும் அதற்குரிய கண்டனத்தைக் கடுமையாகத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

அடுத்தபடியாக முன்னர் முன்மொழிந்த தீர்மானத்திலே ஒரு திருத்தத்தை இந்த நேரத்திலே பதிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைக்க வேண்டும்"

என்று தீர்மானத்தைத் திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

2015 பிப்ரவரி 19] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் திருத்தப்பட்டபடி நிறைவேறியது.

இன்றைக்குக் குழப்பம் விளைவித்த தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தக் கூட்டத்தொடர் முடியும்வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவைக்கிறேன்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்ததற்கு நன்றி.

6. திரு. வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட தே.மு.தி.க. உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும், உறுப்பினர்களுடைய பாதுகாப்பிற்கும், சபையின் கண்ணியத்திற்கும் பொறுப்பேற்றிருக்கக்கூடிய, அரசியல் சாசன சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பேரவைத் தலைவரின் இருக்கைக்கு தே.மு.தி.க. உறுப்பினர்கள் வந்து பேரவைத் தலைவரை மிரட்டி, அவரைத் தாக்கும் நோக்கோடு, அவருக்கே இப்படி ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி, அவர் பதவிக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர். மேலும், தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் ஆணையையும் மீறி, பேரவை விதிகளை, மரபுகளை துச்சமாகக் கருதி, பேரவைத் தலைவரின் ஆணையைச் செயல்படுத்த முனைந்த பேரவைக் காவலர்களை அச்சுறுத்தியும், அவர்களைத் தாக்கியும், அவர்களது தொப்பிகளைத் தட்டி எறிந்தும், அவர்கள் தங்கள் பணியினைச் செய்ய விடாது தடுக்கும்வகையிலும் செயல்பட்டுள்ளார்கள். மேலும், தேமுதிக-வைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் அவரோடு சேர்ந்த ஒரு சில தே.மு.தி.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவது கண்டனத்திற்குரிய ஒன்றாகும். எனவே, இவர்களது செயல் அவை உரிமையை மீறிய செயலாகக் கருதப்படுவதால், இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.